**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை: திருமதி S. மும்தாஜ், B.Sc., B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 –ஆம் நாள் புதன்கிழமை

**மேல்முறையீட்டு வழக்குஎண்.03/2025**
**CNR NO.TNMY06-001170-2024**

ராதாகிருஷ்ணன் ...மேல்முறையீட்டாளர்/வாதி

/ எதிர்/

ஜெயலெட்சுமி ...எதிர்மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி

இந்த மேல்முறையீட்டு வழக்கானது சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.23/2017-ல் 21.12.2023 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இடையில்.-**

ராதாகிருஷ்ணன் ...வாதி

/ எதிர்/

ஜெயலெட்சுமி ...பிரதிவாதி

இம்மேல்முறையீட்டு வழக்கானது 17.02.2026 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்கு வந்து மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டார் தரப்பில் திரு. எஸ். முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலினையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:21 +0530

**<u>தீர்ப்புரை</u>**

இந்த மேல்முறையீட்டு வழக்கானது சீர்காழி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.23/2017-ல் 21.12.2023 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. கடந்த 05.09.1990ம் ஆண்டு உயில்படி "B" அட்டவணையாக கிடைத்த வழக்கு சொத்தை வாதிக்கு பிரதிவாதி சுவாதீனம் ஒப்படைக்கக் கோரியும், வழக்கு சொத்தை பிரதிவாதி வேறு நபர்களுக்கு கிரயம், பெந்தகம், போக்கியம், அடமானம் போன்ற எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், செலவுத் தொகை கோரியும், இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்:</u>**

தாவா சொத்தை வாதியின் தந்தையும், பிரதிவாதியின் கணவருமான சிவலிங்கம் என்பவர் கடந்த 28.05.1986-ம் ஆண்டு கிரயம் பெற்ற சொத்து. தாவா சொத்தின் உரிமையாளரான சிவலிங்கத்திற்கு மூன்று மனைவிகள். சிவலிங்கத்தின் இரண்டாவது மனைவியின் மகன் வாதி, மூன்றாவது மனைவி பிரதிவாதி ஜெயலெட்சுமி ஆவார். வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து பின்னிட்டு வீண் பிரச்சணைகள் ஏற்படக்கூடாது என்பதற்காக சிவலிங்கம் உயிருடன் இருந்த காலத்தில் அவரது மகன்களான முதல் மனைவியான வனமயில் மகன் ராஜேந்திரன், 2-வது மனைவியான தையல்நாயகி மகன் வாதி ராதாகிருஷ்ணன், மூன்றாவது மனைவியான (பிரதிவாதி ஜெயலெட்சுமி) மகன் சந்திரகாசு ஆகியோர் பிரித்து கொள்ள ஏதுவாக கடந்த 05.09.1990-ம் தேதியில் சாட்சிகள் முன்னிலையில் சுய நினைவுடன் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார். அதன்படி "B" அட்டவணை சொத்தாக இவ்வழக்கு சொத்து வாதிக்கு உயில் எழுதி வைத்து, அதன்படி இவ்வழக்கு சொத்து கிடைத்துள்ளது. வாதியின் தகப்பனார் சிவலிங்கம் கடந்த 02.12.1991-ம் தேதியில் இறந்து விட்டதால், மேற்படி உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது. இருப்பினும் குடும்பத்தை நிர்வகித்து வந்த பிரதிவாதி வழக்கு சொத்தை சாகுபடி செய்து

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:29 +0530

பராமரித்து வந்துள்ளார். வழக்கு சொத்து தொடர்பாக ஏற்பட்ட 05.09.1990-ம் தேதியிட்ட உயிலுக்கு விரோதமாக பிரதிவாதி வழக்கு சொத்தை வேறு மூன்றாவது நபருக்கு விற்பனை செய்ய முயற்சித்ததால், வழக்கு சொத்தை வாதிக்கு பிரித்து கொடுக்க கோரி வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 20.12.2016-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். கடந்த 23.12.2016-ம் தேதியன்று அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி பதில் அறிவிப்பு ஏதும் அனுப்பாமலும், வழக்கு சொத்தை வசம் கொடுக்காமலும் வாதி மீது விரோதம் கொண்டு வழக்கு சொத்தை வேறு மூன்றாவது நபருக்கு கிரயம் செய்யபோவதாக பலர் அறிய பொது இடத்தில் 23.12.2016 முதல் சூளுரைத்து சென்றுள்ளார். பிரதிவாதியின் சட்ட புறம்பான செய்கையை இந்நீதிமன்ற உத்தரவின் மூலமே தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் வாதிக்கு ஏற்பட்டுள்ளது. எனவே கடந்த 05.09.1990-ம் ஆண்டு உயில்படி "பி" அட்டவணை வழக்கு சொத்தை வாதிக்கு பிரதிவாதி சுவாதீனம் ஒப்படைக்க கோரியும், வழக்கு சொத்தை பிரதிவாதி வேறு நபர்களுக்கு கிரயம் போன்ற எவ்வித வில்லங்கமும் ஏற்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. **<u>அசல் வழக்கில் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் பிரதிவாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. அதனை நிரூபிக்க வாதி கடமைப்பட்டுள்ளார். வழக்கு சொத்து வாதியின் தகப்பனாரும் எதிர்வாதியின் கணவருமான சிவலிங்கத்திற்கு உரிமையாக இருந்து வந்தது என்பது உண்மை. வழக்கு சொத்து வாதிக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் மூலம் கிடைக்கப் பெற்றது என்பது உண்மை. அவ்வாறு உயில் ஆவணம் மூலம் கிடைக்கப்பட்ட சொத்தினை வாதி, எதிர்வாதிக்கு கடந்த 27.05.1998-ம் ஆண்டு ஒரு கிரய ஆவணம் ஒன்றினை சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுத்து உள்ளார். ஆனால் அவ்வாறு எழுதிக்கொடுக்கப்பட்டு அதன்படி வசம் கொடுத்து விட்டு கிட்டதட்ட 19 ஆண்டுகள்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:35 +0530

கழித்து முழுமையான உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்து வரும் பிரதிவாதியிடமிருந்து வசப்பரிகாரம் கோரியும், தனது வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வரும் சொத்தினை வேறு நபர்களிடம் விற்பனை செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளது முற்றிலும் தவறானது. கடந்த 05.09.1990–ன் படி ஏற்பட்ட உயிலின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொத்து எப்படி எதிர்வாதிக்கு கிடைக்கப்பெற்றது என்ற விபரத்தினை மறைத்து வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது சரியல்ல. அந்த அடிப்படையில் வழக்கு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. வாதி வழக்குரையில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக ஜோடனை செய்யப்பட்டவை. வாதி தனது சின்னமாவிடம் ஒரு கிரய ஆவணத்தின் மூலம் விற்பனை செய்து வந்து தற்போது வசம் கோருவது சரியல்ல. மேலும் வழக்குரையிலோ அறிவிப்பிலோ எந்த தேதியில் எதிர்வாதி ஆக்கிரமித்தார் என்று குறிப்பிடாமல் வசம் பரிகாரம் கோரியுள்ளது சரியல்ல. தவறான சங்கதிகளை கூறி கறைபடிந்த கரங்களுடன் தாக்கல் செய்துள்ள வாதியின் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக் கோரியுள்ளார்.

5. <u>அசல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் வனையப்பட்ட வழக்கு எழுவினாக்கள்:</u>

=

| | |
|---|---|
| 1. | வாதி கோரியுள்ள சுவாதீன மீட்பு பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? |
| 2. | வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா– |
| 3. | தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கக்கூடியது? |

6. <u>அசல் வழக்கின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

அசல் வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், திரு. பாரத்தீபன் என்பவர் வா.சா.2 ஆகவும், திருமதி. நாகலெட்சுமி என்பவர் வா.சா.3 ஆகவும் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆகவும், திரு. பாலகிருஷ்ணன் என்பவர் பி.வா.சா.2 ஆகவும் சாட்சிகளாக

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:40 +0530

விசாரிக்கப்பட்டுள்ளனர். பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**7.** விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து O.S.No.23/2017 வழக்கில் 21.12.2023 தேதியில் வழங்கியுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக வாதி இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

8. **மேல்முறையீட்டு வழக்கிற்கான காரணிகளின் சுருக்கம்:**

விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் எதிரானது. மேலும் சொத்துரிமை மாற்று சட்டத்திற்கு முரணாகவும், புறம்பாகவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. கீழமை நீதிமன்றம் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை சரியான முறையில் பரிசீலனை செய்யாமல் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. தாவா வழக்கு சொத்தை பொறுத்து மேல்முறையீட்டாளர்கள் தந்தை சிவலிங்கம் கடந்த 05.09.1990 ல் எழுதி வைத்த உயில் ஆவணம் மேல் முறையீட்டாளர் தரப்பில் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2 எழுதப்பட்டது உண்மை என்று எதிர்மேல்முறையீட்டார் தரப்பில் ஒத்துக் கொள்ளபப்பட்டுள்ளபோது அது குறித்து கீழமை நீதிமன்றம் சரியான கண்ணோட்டத்தல் அனுகாமல் மேற்படி உயில் செல்லாது என கூறி மேல்முறையீட்டாளர்/ வாதி வழக்கை தள்ளுபடி செய்துள்ளது சரியல்ல. உயில் ஆவணத்தில் சாட்சி கையெழுத்தில் ஒருவரும், மற்றொரு சாட்சியான " நெட்டெழுத்து உள்பட எழுதி பூர்த்தி செய்தது வெங்கடாசலம் மகன் சந்திரபாபு அறிவேன்" என சாட்சி கையெழுத்து செய்திருக்கும் போது அதனை கீழமை நீதிமன்றம் சரியான கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்யாமல் இந்து இறப்புரிமை சட்டம் மற்றும் சொத்து மாற்றுரிமை சட்டப்படி உரிய நபர்கள் சான்று கையொப்பம் இடப்படவில்லை என்ற முடிவு செய்து அதன் அடிப்படையில் வா.சா.ஆ.2 உயில் செல்லாது என தீர்மானித்து கீழமை நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது சரியல்ல. வ.சா.ஆ.2 பற்றி வாதி, பிரதிவாதிகள் அதை சிவலிங்கம் நிறைவேற்றி வைத்தது உண்மை என ஒப்புக்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:45 +0530

கொண்டுள்ளபோது, உயில் எழுதி வைத்தவரின் எண்ணத்திற்கு மாறாக கீழமை நீதிமன்றம் தன்னிச்சையாக முடிவு செய்துள்ளது தவறானது. மேலும் கீழமை நீதிமன்ற தீர்ப்பு வாதி, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்கள் மற்றும் சாட்சியங்களின் வாக்கு மூலங்களை பரிசீலுனை செய்யாமல் அவற்று விரோதமாக தீர்ப்பு வழங்கியுள்ளது சரியல்ல. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மேல்முறையீட்டை அனுமதித்து விசாரணை நீதிமன்ற அசல் வழக்கு எண்.23/2017 ல் 21.12.2023 தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக்கோரியுள்ளார்.

9. **<u>இம் மேல்முறையீட்டு வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினைகள்</u>**:

| | |
|---|---|
| 1. | 05.09.1990 தேதியிட்ட சிவலிங்கம் எழுதிய உயில்படி தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மையா? |
| 2. | வழக்கு சொத்தை பொறுத்து சுவாதீனம் மீட்பு பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதா? |
| 3. | வழக்கு சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கக் கூடியதா? |
| 4. | வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றம் O.S.No.23/2017 ல் 21.12.2023 ம் தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சரியானதா? |

10. இந்த மேல்முறையீட்டின் வசதிக்காக வழக்கு தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு குறிப்பிடப்படுகிறது.

11. மேல் முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் வாதியின் தந்தை சிவலிங்கம் 05.09.1990 தேதியில் எழுதி வைத்த உயில் படி சிவலிங்கம் இறப்பிற்கு பிறகு மேற்படி உயிலில் கண்ட "பி" ஷெட்யூல் சொத்தான தாவா சொத்தை வாதி முழு உரிமையுடன் அடைத்துள்ளதாகவும், வாதி அவருடைய தந்தையின் 2 ம் மனைவியின் மகன் என்றும், பிரதிவாதி வாதி தந்தையின் 3 வது மனைவி என்றும், குடும்பத்தை நிர்வகித்து வந்த பிரதிவாதி தாவா சொத்தை நிர்வகித்து சாகுபடி செய்து வந்ததாகவும், வாதிக்கு தெரியாமல் பிரதிவாதி தாவா சொத்தை

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:50 +0530

மூன்றாம் நபருக்கு பாராதீனம் செய்ய முற்பட்டதால் சொத்தில் சுவாதீனம் கேட்டும் பிரதிவாதி கொடுக்க மறுத்துவிட்டார் என்றும், வாதியின் தந்தை எழுதி வைத்த உயில்படி வாதிக்கு தாவா சொத்து உரிமையுடையது என்பதால் தாவா சொத்தின் சுவாதீனத்தை வாதிக்கு கொடுக்க பிரதிவாதி கடமைப்பட்டுள்ளார் என்றும், இவ்வழக்கில் வாதியின் தந்தை எழுதி வைத்த உயிலில் சாட்சி கையொப்பமிட்டுள்ள தங்கசாமி இறந்து விட்டதால், மேற்படி தங்கசாமியின் கையெழுத்து அவரது குடும்ப உறுப்பினர்களான வா.சா.2 மற்றும் வா.சா.3 ன் மூலம் வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், இம்மேல்முறையீட்டை அனுமதித்து வழக்கில் கோரியுள்ள சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கி விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரியுள்ளார். எதிர்மேல்முறையிட்டார் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தம்முடைய வாதுரையில் வாதியின் தந்தை எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் சட்டப்படி வாதியால் நிரூபிக்கப்படவில்லை என்றும், பிரதிவாதி தாவா சொத்தை எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார் என்பது குறித்து வாதி தரப்பில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும், வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக் கூடியது அல்ல என்றும் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**12. மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 முதல் 3– க்கான தீர்வு:**

வாதி தரப்பு வழக்கானது வாதியின் தந்தைக்கு 3 மனைவிகள் என்றும், வாதி 2வது மனைவின் மகன், பிரதிவாதி வாதி தந்தையின் 3வது மனைவி என்றும், வாதியின் தந்தை 05.09.1990 தேதியில் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், உயில்படி "பி" அட்டவணை சொத்தான தாவா சொத்து, மேற்படி உயிலில் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், வாதியின் தந்தை இறந்த பிறகு உயில் அமுலுக்கு வந்து வாதி தாவா சொத்தை அடைந்ததாகவும், இருப்பினும் குடும்பத்தை மேற்பார்வை செய்து வந்த பிரதிவாதி தாவா சொத்தை நிர்வகித்து சாகுபடி செய்து வந்ததாகவும், தாவா சொத்தை பிரதிவாதி

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:39:55 +0530

மூன்றாம் நபருக்கு விற்க முயற்சி செய்ததால் சொத்தின் சுவாதீனம் கேட்டு அறிவிப்பு கொடுத்தும் தாவா சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி ஒப்படைக்கவில்லை என்பதால், சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

13. வாதியின் வழக்கிற்கு பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் தாவா சொத்து வாதியின் தந்தையும் எதிர்வாதியின் கணவருமான சிவலிங்கத்திற்கு உரிமையாக இருந்தது என்பது உண்மை என்றும், பிரதிவாதி வாதியின் தந்தை சிவலிங்கத்தின் மூன்றாவது மனைவி என்றும், வழக்கு சொத்து வாதிக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் மூலம் கிடைக்கப்பட்டது என்பது உண்மை என்றும், உயில் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தை வாதி, பிரதிவாதிக்கு கடந்த 27.5.1998 –ல் சாட்சிகள் முன்னிலையில் கிரய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும், அதன்படி தாவா சொத்தின் சுவாதீனத்தை விட்டுக் கொடுத்து 19 ஆண்டுகள் கழித்து வசப்பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும், உயில்படி கிடைக்கப்பெற்ற சொத்து எப்படி பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்றது என்ற விவரத்தினை மறைத்து வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், எந்த தேதியில் பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமித்துள்ளார் என்று குறிப்பிடாமல் வசப்பரிகாரம் கோருவது முற்றிலும் சரியல்ல என்பதால், வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

14. வழக்கில் இருதரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 28.05.1986 தேதியிட்ட தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை வாதியின் தந்தை கிரயம் பெற்ற கிரய ஆவணம் வா.சா.ஆ.1 ஆகவும், 05.09.1990 தேதியிட்ட உயில் ஆவணம் வா.சா.ஆ.2 ஆகவும், 20.12.2016 தேதியிட்ட வாதி, பிரதிவாதி மற்றும் ராஜேந்திரன், எழிலரசி ஆகியோருக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:01 +0530

வா.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்புக்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.4 முதல் வா.சா.ஆ.6 ஆகவும், வாதியின் தந்தை சிவலிங்கம் இறப்பு சான்று வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் தாவா சொத்திற்கு பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட சீர்காழி நகராட்சி நகர அளவை பதிவேடு நகல் பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வாதியின் வழக்கை நிரூபிக்கும் பொருட்டு வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தம்முடைய வாய்மொழி சாட்சியத்தில் தாவா சொத்து 50 குழி என்றும், அதனை பிரதிவாதி தன் அனுபவத்தில் வைத்து சாகுபடி செய்தார் என்றும், வழக்கு தாக்கல் செய்த காலத்திலிருந்து 50 குழி பிரதிவாதி ஜெயலட்சுமி தான் சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான் என்றும், தன் தந்தை 1991 ல் இறந்தார் என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்து பிரதிவாதியிடம் இருந்தது என்றும், உயில் எழுதி வைத்த தேதியிலிருந்து இன்றைய தேதி வரை வழக்கு சொத்து பிரதிவாதியிடம் தான் உள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

16. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2 தம்முடைய சாட்சியத்தில் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து தன் தந்தையுடையது என்று சாட்சி அளித்துள்ளார். மேற்படி கையெழுத்து வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.3 தங்கசாமியின் மனைவி தம்முடைய சாட்சியத்தில் வா.சா.ஆ.2 ல் உள்ள கையெழுத்து தன் கணவருடைய கையெழுத்து என்று சாட்சிமளித்துள்ளார். இவ்வழக்கில் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய சாட்சியத்தில் தன்னுடைய கணவர் சிவலிங்கத்திற்கு மூன்று மனைவிகள் என்றும், தன் கணவர் உயிரோடிருந்தக் காலத்திலேயே குடும்ப சொத்துக்களை பொருத்து 05.09.1990 ல் எழுதி வைத்துள்ளார்

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:05 +0530

என்றும், உயில் படி தாவா "பி" அட்டவணை சொத்து வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி சொத்தை வாதி தனக்கு விற்பனை செய்து விட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

17. இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யையில் தாவா சொத்து வா.சா.ஆ.1ன் படி வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் வாதியின் தந்தை குடும்ப சொத்துக்கள் குறித்து உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாக வா.சா.ஆ.2 முன்னிடப்பட்டுள்ளது. மேற்படி உயில் ஆவணத்தின் பரிசீலனையில் தாவா சொத்து "பி" அட்டவணை சொத்தாக வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. உயில் ஆவணத்தில் சாட்சி இறந்து விட்டதால் சாட்சியின் கையெழுத்தை நிரூபிக்கும் விதமாக  வா.சா.2 மற்றும் வா.சா.3 வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி சாட்சிகள் உயில் ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து தங்கசாமி உடையது தான் என்று சாட்சி அளித்துள்ளார்கள். இவ்வழக்கில் தாவா சொத்து வாதி தந்தைக்கு பாத்தியப்பட்டது என்பது பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் வாதியின் தந்தை எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் ஆவணமும் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டும், வாதி உயில் படி அடைந்த சொத்தை பிரதிவாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் 27.05.1998 தேதியில் கிரய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி கிரய ஆவணம் பிரதிவாதி தரப்பில் முன்னிடப்படவில்லை.

18. இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்திற்கு உரிமை மூலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி உயில் ஆவணம்  இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 பிரிவு 63 மற்றும் இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 68 மற்றும் 69 ன் படி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:09 +0530

பரிசீலனை செய்கையில் இந்திய வாரிசுரிமை சட்டம் பிரிவு 63ன் படி உயில் ஆவணத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சாட்சிகள் சாட்சிக் கையொப்பமிட வேண்டியது சட்டப்படியான கடமையாகும். மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 68 மற்றும் 69 படி உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டுள்ள ஒரு நபரையாவது சாட்சியாக விசாரிக்கப்பட வேண்டும், அவ்வாறு அந்த நபர் உயிரோடு இல்லாத பட்சத்தில் உயில் ஆவணம் எழுதி வைத்தவரின் கையொப்பம் மற்றும் சாட்சிகளின் கையொப்பம் உண்மையானவை என்பதை பிற ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் ஒரு சாட்சி கையெழுத்து மட்டுமே பெறப்பட்டுள்ளது. வாதி தரப்பில் உயில் ஆவணத்தின் ஆவண எழுத்தர் "நெட்டெழுத்து உட்பட எழுதி பூர்த்தி செய்தது அறிவேன்" என்று எழுதி கையொப்பம் இட்டுள்ளதால் மேற்படி ஆவண எழுத்தரும் சாட்சியாக கருதப்பட வேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி நபர் வாதி தரப்பில் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆகியோர்கள் தம்முடைய சாட்சியத்தில் உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்து வாதியின் தந்தை சிவலிங்கம் உடையது என்பதை குறிப்பிட்டு சாட்சி அளிக்கவில்லை. மேலும் மேற்படி உயில் ஆவணம் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.22/2017 வழக்கில் உறுதி செயல்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதும், மேற்படி வழக்கு தகுதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படாமல் பிரதிவாதி, வாதியின் வழக்கை ஒப்புக்கொண்டு CPC Order 12 Rule 6ன் கீழ் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே வா.சா.ஆ.2 உயில் ஆவணம் சட்ட முறைப்படி வாதி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானிக்கப்படுகிறது. வா.சா.ஆ.1ன் படி தாவா சொத்து வாதியின் தந்தை பெயரில் கிரயம் பெறப்பட்டுள்ளதால், வாதி தந்தை சிவலிங்கத்தின்

MUMTAJ Digitally signed by MUMTAJ
Date: 2026.03.11 18:40:14 +0530

வாரிசுகள் அனைவரும் தாவா சொத்தை பொருத்து கூட்டுப் பங்கு உரிமையாளர்கள் ஆவார்கள். எனவே தாவா சொத்தில் வாதி மட்டும் தனிப்பட்ட உரிமை கோர இயலாது என்பதால், வழக்கில் கோரி உள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதல்ல என்று மேல்முறையீட்டின் பிரச்சனை எண். 1 முதல் 3–க்கு தீர்வு காணப்படுகிறது.

**19. மேல்முறையீட்டின் பிரச்சனை எண் 4–க்கான தீர்வு**

வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று மேல்முறையீட்டின் பிரச்சனை எண்.1 முதல் 3–க்கு தீர்வு காணப்பட்டுள்ளதால், வாதியின் வழக்கை தள்ளுபடி செய்து அசல் வழக்கு எண்.23/2017–ல் விசாரணை நீதிமன்றம் 21.12.2023 தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சரியானது என்றும், அதில் எவ்வித தலையிடும் அவசியம் இல்லை என்றும் தீர்மானித்து மேல்முறையீட்டின் பிரச்சனை எண்.4–க்கு தீர்வு காணப்படுகிறது.

**20. முடிவாக,** இம்மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண். 23/2017–ல் 21.12.2023 தேதியில் வழங்கியுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.03.11 18:40:19 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

**நகல்:**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

நேரிய/வரைவு தீரப்புரை
மேல்முறையீட்டுவழக்குஎண்.3/2025
நாள் – 11.03.2026